In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

O.S.No.112/2018 | Deposition of Witness : வாசா3

Name: சந்திரமதி | Calling:

Father Name: | Religion:

Village: | Caste:

Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 13.04.2022

முதல் விசாரணை :

எனக்கு நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். நான் திண்டுக்கல் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் வழிகாட்டி சார்பதிவாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் அலுவலகத்தில் எஸ்.கணேசன் என்பவருக்கு முத்திரைத்தாள் விற்பனை செய்ய உரிமம் எண்.23/2010/பி1 அவர்களுக்கு குறிப்பிடப்பட்டுள்ள தொகுதி எண் ஒன்று, வரிசை எண்.12/2011 உடைய முத்திரைத்தாள் விற்பனைத்தாள் பதிவேடு எங்கள் வசம் உள்ளது.

முத்திரைத்தாள் வரிசை எண்.7001 முதல் 7002 ரூ.1000 ரூபாய் மதிப்புள்ள 3 முத்திரைத்தாள்கள் சதாம் உசேன், திண்டுக்கல் என்பவர் பெயரில் 1.12.2011 ம் தேதி விற்கப்பட்டுள்ளது.

முத்திரைத்தாள் வரிசை எண். 7003 முதல் 7005 வரை ரூ.1000 ரூபாய் மதிப்புள்ள 3 முத்திரைத்தாள்கள் சேவியர் ராஜ், திண்டுக்கல் என்பவர் பெயரில் 1.12.2011 ம் தேதி விற்கப்பட்டுள்ளது.

முத்திரைத்தாள் வரிசை எண். 7006 முதல் 7008 வரை ரூ.1000 ரூபாய் மதிப்புள்ள 3 முத்திரைத்தாள்கள் அன்பில்ராணி, திண்டுக்கல் என்பவர் பெயரில் 1.12.2011 ம் தேதி விற்கப்பட்டுள்ளது.

முத்திரைத்தாள் வரிசை எண். 6099 முதல் 6104 வரை ரூபாய் 50 மதிப்புள்ள 6 முத்திரைத்தாள்கள் என்.சதீஷ்குமார், கரூர் என்பவர் பெயரில் 11.11.2011 ம் தேதி விற்கப்பட்டுள்ளது. மேற்படி பதிவேட்டின் சான்றிடப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அதன் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்டது. அந்த பதிவேட்டின் சான்றிட்ட நகல் சாசாஆ.2.

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

6099 முதல் 7006 முத்திரைத்தாள்கள் இந்திய அரசாங்கத்தால் அச்சடிக்கப்பட்டது என்றால் சரிதான். போலியானது அல்ல. 7000 முதல் 7006 வரையான முத்திரைத்தாள்களை யார் கையெழுத்து போட்டு வாங்கினார்கள் என்றால் ஜி.சுமதி என்பவர் கையெழுத்து போட்டு வாங்கியுள்ளார். 6105 என்ற 50 ரூபாய் முத்திரைத்தாள் ஆர்.கணேசன் என்பவரது பெயரில் விற்பனையாகி உள்ளது என்றால் சரிதான். அதே போல் 6106 என்ற 20 ரூபாய் முத்திரைத்தாள் முத்துக்குமார் என்பவரது பெயரில் விற்பனையாகி உள்ளது என்றால் சரிதான். எஸ்.கணேசன் என்பவர் இன்றளவும் முத்திரைத்தாள் விற்பனையாளராக இருக்கிறார் என்றால் தெரியாது. ஆவணங்களைப் பார்த்தால்தான் தெரியும். எஸ்.கணேசன் என்பவர் மீது முத்திரைத்தாள் விற்பனை சம்மந்தமாக மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரிந்து இல்லை. இது சம்மந்தமாக பத்திர பதிவு அலுவலகத்தில் கணேசன் மீது விசாரணை எதுவும் நடந்ததா என்றால் தெரியாது.

3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை- மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

மறு விசாரணை இல்லை

M K JAMUNA
Digitally signed by M K JAMUNA
Date: 2022.04.13 15:17:28 +0530

Prl.Sessions Judge,
Dindigul